# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## *2022 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 29 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி*

*(2022.05.04 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

# இலங்கை மின்சாரம்
# (திருத்தம்)

**2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

*மின்சக்தி அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## சட்டப்பயன் பற்றிய கூற்று

**வாசகம் 2**: இவ்வாசகம் (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, மின்சாரப் பிறப்பாக்கத்திற்காக விலைகோரும் நடைமுறையொன்றில் பங்குபற்றவதற்கு எவரேனுமாளை அனுமதிப்பதாகும்.

**வாசகம் 3**: இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது:-

(அ) மின்சாரப் பிறப்பாக்கத்திற்குப் பிறப்பாக்க உரிமமொன்றின் வழங்குகைக்காக விண்ணப்பிப்பதற்கு எவரேனுமாளை அனுமதிப்பதாகும்; அத்துடன்

(ஆ) 25 மெ. வோ. மின்சாரப் பிறப்பாக்கக் கொள்ளளவுக்கு மேலான மின்சாரப் பிறப்பாக்கத்திற்குப் பிறப்பாக்க உரிமமொன்றை வழங்குவதற்காக விண்ணப்பிப்பதற்குத் தகவுடையவராகவிருப்பதற்கு ஆளொருவர்மீது விதிக்கப்பட்ட மட்டுப்பாட்டை இல்லாதாக்குவதற்கும் பிறப்பாக்கக் கொள்ளளவின்மீதான ஏதேனும் வரையீடின்றி அதற்காக விண்ணப்பிப்பதற்கும் எவரேனுமாளை அனுமதிப்பதாகும்.

**வாசகம் 4**: இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது:-

(அ) 9 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற்குச் செய்யப்பட்ட திருத்தம் தொடர்பாகச் செய்யப்பட்ட விளைவாந்தன்மையினதானவொரு திருத்தமாக அதன் (3) ஆம் உட்பிரிவை நீக்குவதாகும்; அத்துடன்

(ஆ) அபிவிருத்தி செய்யப்படவேண்டிய ஏதேனும் ஏலவேயுள்ள பிறப்பாக்கப் பொறித்தொகுதிக்குக் காப்புவாசகத்தின் ஏற்பாடுகளின் ஏற்புடைமையை விசாலிப்பதும் அவ்வுட்பிரிவிலுள்ளவொரு விட்டுவிடுகையை நிவர்த்தி செய்வதுமாகும்.

## இலங்கை மின்சாரம்
## (திருத்தம்)

ச.வ.-ஒ. 8/2019

### 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்*

**1**. இச்சட்டம், 2022 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, இலங்கை மின்சார (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்கச் சட்டத்தின் 8 ஆம் பிரிவை மாற்றீடுசெய்தல்*

**2**. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டத்தின் 8 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

"*மின்சாரப் பிறப்பாக்கத்திற்கு விலைகோரும் நடைமுறையொன்றில் பங்கேற்றல்*

8. மின்சாரப் பிறப்பாக்கத்திற்காக விலை கோரும் நடைமுறையொன்றில் எவரேனுமாள் பங்குபற்றலாம்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"(1) எவரேனுமாள், மின்சாரப் பிறப்பாக்கத்துக்கான பிறப்பாக்க உரிமமொன்றின் வழங்குகைக்காக விண்ணப்பிப்பதற்குத் தகவுடையவராதல் வேண்டும்."; அத்துடன்

(2) அதன் (1அ) என்னும் உட்பிரிவை நீக்குவதன்மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவினைத் திருத்துதல்*

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவானது இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிடுவதன்மூலமும்; அத்துடன்

(2) அதன் (4) ஆம் உட்பிரிவுக்கான காப்பு வாசகத்தில்–

(அ) "அபிவிருத்தி செய்யப்படும் ஏலவேயுள்ள ஏதேனும் பிறப்பாக்கப் பொறித்தொகுதியின் விசாலிப்பு தொடர்பில் பின்வரும் விடயங்களில் ஏற்புடைத்தாதலாகாது:-" என்னும் சொற்களுக் குப் பதிலாக, "அபிவிருத்தி செய்யப்படும் அல்லது அபிவிருத்தி செய்யப்படவேண்டிய ஏலவேயுள்ள ஏதேனும் பிறப்பாக்கப் பொறித் தொகுதியின் விசாலிப்புத் தொடர்பில் பின்வரும் விடயங்களில் ஏற்புடைத்தாத லாகாது:-" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(ஆ) அதன் (அ) என்னும் பந்தியில், "பிறப்பாக்கத் தொகுதிக்கு அல்லது விசாலிப்பிற்கு;" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பிறப்பாக்கத் தொகுதிக்கு அல்லது விசாலிப்பிற்கு; அல்லது" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**5.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.